# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-6 - தீர்ப்பாரை
## (எம்பெருமான் பிரிந்தவுடன் பராங்குச நாயகி மயங்க, மயக்கம் தீர தேவதாந்தரக் கட்டுவிச்சியைக் கொணர்ந்த தாயைத் தோழி வெறிவிலக்க, திருநாமம் கேட்டு நாயகி உணர்தல்)

3062 * தீர்ப்பாரை யாம் இனி * எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்! *
ஓர்ப்பால் இவ்வொண்ணுதல் * உற்ற நல்நோய் இது தேறினோம் **
போர்ப்பாகு தான் செய்து * அன்று ஐவரை வெல்வித்த * மாயப் போர்த்
தேர்ப் பாகனார்க்கு * இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே 1

3063 திசைக்கின்றதே இவள் நோய் * இது மிக்க பெருந்தெய்வம் *
இசைப்பின்றி நீரணங்காடும் * இளந்தெய்வம் அன்றிது **
திசைப்பின்றியே * சங்கு சக்கரம் என்றிவள் கேட்க * நீர்
இசைக்கிற்றிராகில் * நன்றேஇல் பெறும் இது காண்மினே 2

3064 இது காண்மின் அன்னைமீர்! * இக்கட்டுவிச்சி சொற்கொண்டு * நீர்
எதுவானும் செய்து * அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின் **
மதுவார் துழாய்முடி * மாயப்பிரான் கழல் வாழ்த்தினால் *
அதுவே இவள் உற்ற நோய்க்கும் * அருமருந்தாகுமே 3

3065 மருந்தாகும் என்று அங்கோர் * மாய வலவை சொற்கொண்டு * நீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் * களனிழைத்து என் பயன்? **
ஒருங்காகவே உலகேழும் * விழுங்கி உமிழ்ந்திட்ட *
பெருந்தேவன் பேர் சொல்லகிற்கில் * இவளைப் பெறுதிரே 4

3066 இவளைப் பெறும் பரிசு * இவ்வணங்காடுதல் அன்றந்தோ! *
குவளைத் தடங்கண்ணும் * கோவைச் செவ்வாயும் பயந்தனள் **
கவளக் கடாக்களிறட்ட பிரான் * திருநாமத்தால் *
தவளப் பொடிக் கொண்டு * நீர் இட்டிடுமின் தணியுமே 5

3067 தணியும் பொழுதில்லை[1] * நீர் அணங்காடுதிர் அன்னைமீர்! *
பிணியும் ஒழிகின்றதில்லை * பெருகும் இதுவல்லால் **
மணியின் அணிநிற மாயன் * தமரடி நீறு கொண்டு *
அணிய முயலின் * மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே 6

3068 அணங்குக்கு அருமருந்தென்று * அங்கோர் ஆடும்கள்ளும்பராய் *
சுணங்கை[2] எறிந்து * நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்! **
உணங்கல் கெடக் * கழுதையுதடாட்டம் கண்டு என் பயன்? *
வணங்கீர்கள் மாயப்பிரான் * தமர் வேதம் வல்லாரையே 7

---
[1] பொழுதின்றி
[2] துணங்கை

3069 வேதம் வல்லார்களைக் கொண்டு * விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து * இவள் நோய் இது தீர்த்துக் கொள்ளாது போய் **
ஏதம் பறைந்து அல்ல செய்து * கள்ளூடு கலாய்த்தூய் *
கீதமுழ விட்டு * நீர் அணங்காடுதல் கீழ்மையே 8

3070 கீழ்மையினால் அங்கோர் * கீழ்மகன் இட்ட முழவின் கீழ் *
நாழ்மை பல சொல்லி * நீரணங்காடும் பொய் காண்கிலேன் **
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம் * இந்நோய்க்கும் ஈதே மருந்து *
ஊழ்மையில் கண்ணபிரான் * கழல் வாழ்த்துமின் உன்னித்தே 9

3071 உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் * அவனை அல்லால் *
நும் இச்சை சொல்லி * நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்! **
மன்னப்படு மறை வாணனை * வண்துவராபதி
மன்னனை * ஏத்துமின் ஏத்துதலும் * தொழுதாடுமே 10

3072 * தொழுதாடி தூமணி வண்ணனுக்கு * ஆட்செய்து நோய் தீர்ந்த *
வழுவாத தொல்புகழ் * வண்குருகூர்ச் சடகோபன் ** சொல்
வழுவாத ஆயிரத்துள் * இவை பத்து வெறிகளும் *
தொழுதாடிப் பாட வல்லார் * துக்க சீலம் இலர்களே 11

**அடிவரவு:** தீர்ப்பார் திசை இது மருந்து இவளை தணியும் அணங்கு
வேதம் கீழ்மை உன்னித்து தொழுது சீலம்